அகில இந்திய வானொலி
திருச்சிராப்பள்ளி

ஆகாசவாணி செய்திகள் 01.45 pm

**22. 04. 2026**

தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் நாளை நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

2. தமிழ்நாடு முழுவதிலுமிருந்து 4 லட்சத்து 18 ஆயிரம் தபால் வாக்குகள் இதுவரை பதிவாகி உள்ளன.

3. வாக்குச்சாவடி மையங்களுக்கும் தேர்தல் உபகரணங்கள் எடுத்துச் செல்லும் பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. பெஹல்காம் தீவிரவாத தாக்குதலின் முதலாவது ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப் படுகிறது.

5. இலங்கை கடற்படையினர் தாக்குதலில் காயமடைந்த நாகை மாவட்டத்தை சேர்ந்த 4 மீனவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

தேர்தல்

தமிழ்நாட்டில் 234 சட்டப் பேரவை தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக நாளை நடைபெறும் வாக்குப் பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மாநிலம் முழுவதிலுமிருந்து 4 லட்சத்து 18 ஆயிரம் தபால் வாக்குகள் வந்து சேர்ந்துள்ளதாக குறிப்பிட்டார்.

சி. விஜில் செயலி மூலம் 5 ஆயிரத்து 634 புகார்கள் பெறப்பட்டுள்ளதாகவும், இதுவரை 543 கோடி ரூபாய் ரொக்கம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இத்தேர்தலில் 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளதாகவும்,

14 லட்சத்து 59 ஆயிரம் முதல்முறை வாக்காளர்கள் என்றும் கூறினார்.

தேர்தல் பணியில் 3 லட்சத்து 60 ஆயிரம் பேரும்,

பாதுகாப்பு பணியில் 83 ஆயிரம் காவலர்களும் ஈடுபடுத்தப் படுவதாக கூறிய அவர், 300 கம்பெனி துணை ராணுவம் பாதுகாப்பு பணிக்காக தமிழகம் வந்துள்ளதாக குறிப்பிட்டார்.

அனைத்து வாக்குச்சாவடி மையங்களுக்கும் ஒரு லட்சத்து 6 ஆயிரம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தொிவித்தார்.

மாநிலத்தில் உள்ள 234 சட்டப்பேரவை தொகுதிகளில் மொத்தம் 4 ஆயிரத்து 23 வேட்பாளர்கள் களத்தில் உள்ளதாக கூறினார்.

வாக்குப்பதிவு நாளை காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெறும் என்று கூறிய அவர், வாக்குச்சாவடிக்குள் கைப்பேசி எடுத்துச்செல்ல அனுமதி இல்லை என்றும், இவற்றை பாதுகாப்பாக வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் 5 ஆயிரத்து 949 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளது என்று கூறிய அவர், மாநிலம் முழுவதும் 62 வாக்கு எண்ணும் மையங்கள் அமைக்கப்படவுள்ளன என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் நாளைய வாக்குப்பதிவிற்கு வாக்களார் அடையாள அட்டை இல்லாதவர்கள் ஆதார், வங்கி கணக்கு புத்தகம், ஓட்டுநர் உரிமம், வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை, கடவுச்சீட்டு உள்ளிட்ட 12 ஆவணங்களில் ஏதாவது ஒன்றை காட்டி வாக்களிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவிற்காக மாநிலம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச் சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்காளர்கள் electrol search. eci. gov. in வாக்காளர் உதவி செயலி மற்றும் 1950 என்ற கட்டணமில்லா தொலைப்பேசி எண்ணை பயன்படுத்தி தங்களது வாக்குச்சாவடி விவரங்களை தொிந்துக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்கள் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரங்கள், தேர்தல் அலுவலர்களின் தொடர்பு எண்கள் ஆகியவற்றை erolls.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

❖❖❖❖❖❖❖❖

தேர்தல் மாவட்டங்கள்

தமிழகத்தில் உள்ள அனைத்து வாக்குச் சாவடி மையங்களுக்கும் தேர்தல் உபகரணங்கள் கொண்டு செல்லும் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருச்சியில் உள்ள 9 சட்டப்பேரவை தொகுதிகளின் இரண்டாயிரத்து 787 வாக்குச்சாவடிகளுக்கு தேவையான வாக்காளர் பட்டியல் உள்ளிட்ட அனைத்து பொருட்களும் இம்மையங்களுக்கு போலீஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டு வருகிறது.

கடலூர் மாவட்டத்தின் 9 சட்டமன்ற தொகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 2 ஆயிரத்து 590 வாக்குச்சாவடி மையங்களில் நான்காயிரத்து 500 காவல் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

வேலூர் மாவட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கு அழியாமை, படிவங்கள் உள்ளிட்ட அனைத்து தேர்தல் பொருட்களையும், வாக்குப்பதிவு இயந்திரங்களையும் அனுப்பி வைக்கும் பணிகள் திட்டமிட்ட படி நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நெல்லை மாவட்டத்தில் உள்ள ஆயிரத்து 678 வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான பொருட்கள் இன்று பிற்பகலுக்குள் கொண்டு செல்லப்பட்டு அனைத்து வாக்குச் சாவடிகளும் தயார் நிலையில் வைப்பதற்கான பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம் பவானி சாகர் தொகுதிக்கு உட்பட்ட சத்தியமங்கலம் புலிகள் காப்பக மலை கிராம வாக்குச் சாவடிகளுக்கு மின்னணு இயந்திரங்களை கொண்டு செல்ல ஏதுவாக அடுத்த 3 நாட்களுக்கு மலைப்பகுதிகளில் கனரக வாகனங்கள் செல்ல தடை விதித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

நீலகிரி மாவட்ட வனப்பகுதிகளில் உள்ள வாக்குச் சாவடிகளுக்கு செல்லும் தேர்தல் பணியாளர்களுக்கு ஆயுதம் ஏந்திய வனத்துறையினரை கொண்டு பாதுகாப்பு அளிக்கப்பட உள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி லக்ஷ்மி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

வாகன வசதி இல்லாத பகுதிகளில் வசிக்கும் வாக்காளர்களை அழைத்து செல்ல உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாவட்டத்தில் உள்ள 736 வாக்குச்சாவடிகளுக்கு தேர்தல் உபகரணங்கள் அனுப்பி வைக்கும் பணிகளை அவர் பார்வையிட்டார்.

தர்மபுரி மாவட்டம் எரப்பட்டி, அன்னசாகரம் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி வாக்குச் சாவடிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. சதீஷ் இன்று ஆய்வு செய்தார்.

100 சதவிகித வாக்குப்பதிவை உறுதி செய்யவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாக அவர் கூறினார்.

.. வாய்ஸ் ..

தென்காசி மாவட்டத்தில் 5 சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் பணிகளுக்காக 156 மண்டல அலுவலர்கள் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

நாமக்கல் மாவட்டத்தில் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் குடிநீர், காத்திருப்பு இடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

வாக்காளர்கள் 100 சதவிகிதம் வாக்களிக்க வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

வாக்காளர்கள், தங்களது கைப்பேசி, கேமரா ஸ்மார்ட் கடிகாரம் போன்றவற்றை வைத்து செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

கோவை மாவட்டத்தின் 10 சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 3 ஆயிரத்து 563 வாக்குச்சாவடிகள் மற்றும் ஆயிரத்து 62 வாக்குச் சாவடி அமைவிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இப்பகுதிகளுக்கு தேர்தல் பொருட்கள் எடுத்துச் செல்லும் பணிகள் முழுவீச்சில் நடைபெறுவதாக எமது செய்தியாளர் தொ◌ிவித்துள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி பகுதியில் முறையான சாலை வசதி இல்லாத நெக்நா மலை கிராமத்திற்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாகனம் மூலம் அனுப்பி வைக்கும் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

❖❖❖❖❖❖❖❖

மேற்கு வங்கம்

இதனிடையே மேற்கு வங்கத்தில் முதற்கட்டமாக 152 சட்டப் பேரவை தொகுதிகளுக்கு நாளை நடைபெறும் வாக்குப் பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன.

ஆயிரத்து 478 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

5 மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை வரும் 4-ம் தேதி நடைபெறும்.

❖❖❖❖❖❖❖❖❖

## பெஹல்காம்

பெஹல்காம் தீவிரவாத தாக்குதலின் முதலாவது ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப் படுகிறது.

இச்சம்பவத்தில் உயி◌ா◌ிழந்தோரின் குடும்பத்தினருடன் தேசம் துணை நிற்பதாக கூறியுள்ள குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, தீவிரவாதத்தை அனைத்து நிலைகளிலும் ஒடுக்க நாடு உறுதியுடன் இருப்பதாக குறிப்பிட்டார்.

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதா கிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திரமோடி ஆகியோர் தீவிரவாதத்தை வேரோடு அகற்றுவதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

கடந்த ஆண்டு காஷ்மீர் பகுதியில் பெஹல்காமில் சுற்றுலா பயணிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 25 பேர் கொல்லப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இந்திய ராணுவம் ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதலில், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு பகுதியில் உள்ள 9 தீவிரவாத முகாம்களை தகர்த்தழித்து தக்க பதிலடி வழங்கியது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖

## புவி தினம்

புவி தினம் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த சவால்களை உலகம் எதிர்கொண்டிருக்கும் வேளையில் நமது ஆற்றல் ! நமது புவி ! எனும் கருப்பொருளுடன் இந்த ஆண்டு இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

புவியை பாதுகாப்பதன் அவசியத்தை குடியரசு துணைத் தலைவரும் பிரதமரும் வலியுறுத்தியுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

## மீனவர்கள்

நாகை மாவட்டம் வேதாரண்யத்தை அடுத்த வாணவன் மகாதேவி பகுதியை சேர்ந்த 4 மீனவர்கள் கோடியக்கரைக்கு தென்கிழக்கே இன்று காலை மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அவர்களின் வலைகளையும் சேதப்படுத்தினர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த 4 மீனவர்களும் நாகை அரசு மருத்துவக் கல்லூாி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து கடலோர காவல் குழும போலீசார் விசாரணை மேற்கொண்டு வருவதாக எமது நாகை செய்தியாளர் தொாிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

கிாிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிாிக்கெட் போட்டியில் லக்னோவில் இன்றிரவு ஏழரை மணிக்கு லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் – ராஜஸ்தான் ராயல்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖